- ஒரு வியாபார நிறுவனத்தின் வணிக குறியீட்டை சட்டப்படி பயன்படுத்தும் உரிமம் பெற்ற ஒரு நபரை தனி உரிமம் பெற்றவர் என்கிறோம்

2 தனி உரிமையியலின் இரண்டு நன்மைகளை கூறு

- இடர்களை குறைத்தல்
  தனி உரிமம் பெற்றவர் ஏற்கனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால் புதியதாக ஒரு வாணிபத்தை துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்
- வணிக விரிவாக்கம்
  கூடுதல் செலவுகள் இல்லாமல் வணிகத்தை விரிவாக்கம் செய்ய முடியும்

3 **தனி உரிமையியலின் இரண்டு தீமைகளை கூறுக**

State two disadvantages of franchising?

- தனி உரிம கட்டணம் அதிகம்
- தனி உரிமம் அளித்தவரின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுகிறது

4 ஏட்டுகடன் முகவர் என்பவர் யார்? Who is a factor?

- ஏட்டுகடன் முகவர் என்பவர் ஒரு நிறுவனத்தின் கணக்குகளான பெறுதர்குரிய மாற்று சீட்டு மற்றும் கடனாளிகளை பெற்று கொண்டு நிறுவனத்திற்க்கு நடைமுலதனத்தினை ஈடு செய்யும் பொருட்ட நிதி உதவி அளிப்பவர் ஆவார்

5 புறத் திறனீட்டல்/புற ஒப்படைப்பு வரையறுக்க. Define outsourcing

- வெளியாட்களிடம் பணியை ஒப்படைப்பு செய்து அதை தன் நிறுவனத்தின் மூலம் எப்போதும் போல் சந்தையிடுதலை புறத்திறனீட்டல் என்கிறோம்
- இம்முறையில் ஒரு நிறுவனம் தன்னுடைய சேவையின் ஒரு பகுதியை சிறப்பாக குறைந்த செலவில் செய்கின்ற ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு ஒப்பந்த முறையில் வழங்குவதாகும்

6 புற ஒப்படைப்பின் தேவைகள் என்ன? What is need for outsourcing?

- நிறுவனத்தின் செயல்பாட்டு திறன் மேம்பாடு அடைகிறது
- வாடிக்கையாளர்களின் திருப்தி மேம்படுத்தப்படுகிறது
- செலவுகள் குறைக்கப்படுகிறது

7 எந்த வகையில் தொழில் செயல்முறை புற ஒப்படைப்பு முக்கியமென நினைக்கிறாய்? State the importence of BPO

- முதன்மை செயல்பாடுகளில் கவனம் செலுத்துதல்
- நிறுவனத்தின் செயல்பாட்டு திறன் மேம்பாடு அடைகிறது
- செலவுகள் குறைக்கப்படுகிறது
- அதிக இலாபம் ஈட்டல்

8 அறிவுசார் செயல்முறை புற ஒப்படைப்புச் செய்தலின் நன்மைகள் என்ன? What are the benefits of KPO?

- சிறந்த திறமைகளை பயன்படுத்துதல்
- சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வை கண்டறிதல்
- செலவுகளை குறைத்தல்
- இடர்பாட்டினை குறைத்தல்

9 பெயர்ச்சியியல் -வரையறை தருக. Define Logistics.

- நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு பொருள் பற்றிய தகவல் மற்றும் மக்கள் ஆற்றல் உள்ளிட்ட பிற வளங்களை ஒரு பொருளின் துவக்கப்புள்ளியிலிருந்து அது நுகர்வோரை சென்றடையும் வரையிலானது
- இது நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு உற்பத்தி பொருட்களை சிறந்த முறையில் பகிர்ந்து அளிக்கும் நோக்குடன் செயல்படுகிறது

10 பெயர்ச்சியியல் தேவை யாது? What is the need for Logistics?

- செலவினங்களை குறைத்து திறமைகளை மேம்படுத்த உதவுகிறது
- உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு உரியவருக்கு கொண்டு செல்ல உதவுகிறது
- அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் மூலம் வாடிக்காயாளர்களை திருப்தி படுத்த முடியும்

11 பெயர்ச்சியியல் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக. Write about the importance of Logistics.

- செலவினங்களை குறைத்து திறமைகளை மேம்படுத்த உதவுகிறது
- உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு உரியவருக்கு கொண்டு செல்ல உதவுகிறது
- அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் மூலம் வாடிக்காயாளர்களை திருப்தி படுத்த முடியும்

12 பெயர்ச்சியியல் வகைகள் யாவை?

What are the types of Logistics Applications?

- ❖ முடிவெடுத்தல்களின் அடிப்படையில்
- ❖ பங்கெடுக்கும் நபர்களின் அடிப்படையில்
- ❖ பெயர்ச்சியலில் இணைந்துள்ள செயல்களின் அடிப்படையில்
- ❖ பெயர்ச்சியலில் சேராத செயல்களின் அடைப்படையில்

13 பெயர்ச்சியல் மேலாண்மை மாதிரிகள் யாவை?

- ❖ முன்னாய்வு மாதிரிகள்
- ❖ கணித கோட்பாடு திட்ட மாதிரிகள்( இருப்பிட மாதிரிகள், பகுப்பு மாதிரிகள், பகிர்வு வலையமைப்பு மாதிரிகள்)
- ❖ சரக்கிருப்பு மாதிரிகள்
- ❖ வழிகாட்டு மாதிரிகள்
- ❖ அட்டவணையிட்ட மாதிரிகள்
- ❖ மாற்று ஏற்பாடுகள் உள்ளடக்கிய பகுப்பாய்வு மாதிரிகள்

14 மின்னணு வணிகம் பற்றி நீவிர் அறிவது யாது? What do you mean by e-commerce?

- ➢ மின்னணு வலைதளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றலுக்கு மின்னணு வர்த்தகம் எனப்படும்

3 Marks

1 தனி உரிமையியலின் வகைகள் யாவை?

1. தயாரிப்பு பொருள் அல்லது வர்த்தக பெயர் தனி உரிமையியல்
   - ➢ உற்பத்தி சார்ந்த பொருட்களுடன் தொடர்புடையது
   - ➢ பொருட்களை விற்கும் நோக்குடன் தனி உரிமம் அளித்தவர் செயல்படுகிறார்
2. வணிக வடிவமைப்பு தனி உரிமையியல்
   - ➢ ஒரு வணிகத்தின் அனைத்து வர்த்தக அம்சங்களையும் உள்ளடக்கிய செயல்பாடுகளை தனி உரிம ஒப்பந்த அடிப்படையில் வழங்க்ப்படுமாயின் அது வணிக வடிவமைப்பு தனி உரிமை எனப்படும்

2 ஏட்டுக்கடன் முகமையில் உள்ள படிநிலைகள் யாவை?

- ➢ வணிக நிறுமம் உரிமை பேராளுடன் ஒப்பந்தம் செய்தல் முதல் நிலை ஆகும்

- எப்பொழுது எல்லாம் கடன் விற்பனை நிகழ்கிறதோ அப்பொழுது இடாப்பினை தயாரித்து அவற்றின் ஒரு பகுதியினை உரிமை பேராளுக்கு அனுப்ப வேண்டும்
- நிறுவன கடன் நிலுவை பற்றிய தகவல்களை உரிமை பேராளுக்கு ஒப்படைப்பு செய்வதன் மூலமாகவும், அதே சமயம் வாடிக்கையாளர்களுக்கும் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிவிக்க வேண்டும்
- குறிப்பிட்ட நிலுவை தேதியில் உரிமை பேராள் வாடிக்கையாளரிடமிருந்து தொகையை வசூலிக்கிறார்
- தன்னுடைய சேவை தொகையை எடுத்துக்கொண்டு மீதி தொகையை நிறுவனத்திற்க்கு அனுப்பி வைத்தல் இறுதி நிலை ஆகும்

3 பெயர்ச்சியியலின் நன்மைகள் விவரி.

- முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது
- பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கிறது
- வேலை வாய்ப்புகளை ஊக்குவிக்கிறது
- குறைவான முதலீடு போதுமானது
- சிறந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது

4 பெயர்ச்சியியல் மேலாண்மைக்கு வழங்கல் வழி சங்கிலி மேலாண்மைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை கூறு.

| | பெயர்ச்சியல் மேலாண்மை | வழங்கல் வழி சங்கிலி மேலாண்மை |
|---|---|---|
| நோக்கம் & இலக்குகள் | வாடிக்கையாளர் மன நிறைவு | போட்டி அனுகூலம்(competitive advantage) |
| இணையும் நிறுவனங்கள் | ஒன்று | ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் |
| தோற்றம் மற்றும் வளர்ச்சி | பழமையானது | நவீனமானது |
| அடிப்படை | அளிப்பு செயல்பாடு | தேவை செயல்பாடு |
| கவனம் | அடக்க விலையை குறைப்பதில் | இலாபத்தை மையப்படுத்தி இயங்குகிறது |

5 வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?

- வாங்குபவர் உலகம் முழுவது கிடைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை அறிய முடிகிறது
- உலகில் எந்த பகுதியிலிருந்தும் நேரம் காலம் இல்லாமல் பொருட்களை வாங்க முடியும்
- பொருட்களின் விலை குறைவு
- ஈ.புத்தகம் வாங்குதல் விற்றல் கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம்

Five Marks

1 தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக

- தனி உரிமையியல் தொடர்புடைய நிபந்தனைகள் , விதிமுறைகள் உடன்படிக்கையில் மூலம் ஏற்படுகிறது
- கால அளவு 5 ஆண்டுகள் அல்லது ஒப்புகொண்டப்படி
- தனி உரிமம் பெற்றவர் தனி உரிம காலத்தின் எந்த போட்டித் தொழிலையும் மேற்கொள்ள உரிமை இல்லை
- ஒப்பந்தப்படி தனி உரிமம் பெற்றவர் தனி உரிமம் அளித்தவருக்கு ஒப்பந்தப்படி ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துகிறார்
- தனி உரிமம் பெற்றவர் தனி உரிமம் அளித்தவரின் வணிக கோட்பாடுகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்
- தனி உரிமம் அளித்தவர் தனி உரிமம் பெற்றவருக்கு தேவையான பயிற்ச்சினை அளிக்க வேண்டும்

2 ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களைத் தெளிவுபடுத்துக.

1. கடன் ஏடுகளை பராமரித்தல்
    - வணிகரின் ஏட்டுகடன்களை பராமரிக்கும் முழு பெறுப்பினை தனி உரிமை போராள் ஏற்று கொள்கிறார்
2. கடன் எல்லைகளை நிர்வகித்தல்
    - வாராக்கடன் தொடர்புடைய நிதிச்சுமையை தனி உரிமை போராள் ஏற்று கொள்கிறார்
    - இதனால் வணிகரின் இடர்பாடு குறைகிறது
3. ரொக்க முன்பணம்

மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும் - பீட்டர் F டிரக்கர்

3 சமூக அதிகாரம் என்பதன் பொருள் தருக?

- சமூக அதிகாரம் என்பது மற்றவர்கள் தன்னுடைய இலக்கினை அடைய தடை ஏற்படுத்தினாலும் இலக்கினை அடைய கூடிய திறனை கொண்டுள்ளவை ஆகும்
- Social power is the ability to achieve goals even if other people oppose those goals

4 தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?

- அரசின் அதிக கட்டுப்பாடு அதிகம் ஏதும் இல்லாமல் தேவை அளிப்பின் அடிப்படையில் செயல்படும் நிறுமம் தடையற்ற நிறுவனம் ஆகும்
- Business governed by the market forces of demand and supply, un-restrained by undue government interference through excessive controls and regulations..

5 நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?

- சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பு
- ஆனால் சட்டத்தில் குறிப்பிடாதவை

6 பங்குதாரர்கள்(stakeholder) என்று யாரை அழைக்கலாம்?

- நிறுவனத்தின் மீது ஆர்வம் கொண்டுள்ள நபராகும் முக்கியமாக வியாபாரத்தில்
- இவரால் நிறுமம் பாதிக்கப்படலாம் அல்லது பாதிக்கப்பட கூடிய சூழ்நிலை இருக்கலாம்
- A stakeholder is a party that has an interest in a company and can either affect or be affected by the business.

3 Marks

1 தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் தேவை என்ன என்பது பற்றி நீர் ஏன் சிந்தனை செய்யக் கூடாது?

1. சுய ஆர்வம்
   - சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்
2. சமுதாய உருவாக்கம்
   - நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்டுவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன

- பெரு நிறுவன ஆளுககையின் மூலம் தனிப்பட்ட நபரின் இலக்குகள், சமுதாயத்தின் இலக்குகள் மற்றும் பொருளாதார இலக்குகள் ஆகியவற்றிற்கிடையே சமநிலையை பெற்றிட இக்கோட்பாடு தேவைப்படுகிறது

5 பன்னாட்டு நிறுவனங்கள் என்றால் என்ன?

- பன்னாட்டு நிறுமம் என்பது இரண்டு அல்லது அதற்க்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும் - நைல் H ஜேகோபி

3 marks

1 தொழில் நெறிமுறைகள் - வரையறுக்க. Define business ethics

- பெருநிறுவன நெறிமுறை, உள் வர்த்தகம், லஞ்சம், பாகுபாடு, பெருநிறுவன[கார்ப்பரேட்] சமூக பொறுப்புக்கள் மற்றும் நேர்மையற்ற பொறுப்புக்கள் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தொடர்பான முறையான வணிக கொள்கைகளையும் நடைமுறைகளையும் வணிக நெறிமுறைகள் ஆய்வு செய்கின்றன.
- சட்டம் பெரும்பாலும் வணிக நெறிமுறையை வழிகாட்டுகிறது,
- அதே சமயம் மற்ற முறை வணிக நெறிமுறைகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வர்த்தகங்களை பின்பற்றுவதற்கு ஒரு அடிப்படை வடிவமைப்பை வழங்குகிறது.

2 தொழில் நெறிமுறைகளின் கருத்து என்ன?

- தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் போன்றவர்களுக்கு தொழில் நெறிமுறைகள் அவசியம்
- இவை தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன
- தொழில் நெறிமுறைகள் வணிக நடத்தையை வெளிப்படுத்துகிறது

3 வணிகத்தில் நெறிமுறைகள் ஏன் அவசியம்?

பின்வரும் காரணங்களுக்கு வணிகத்தில் நெறிமுறைகள் அவசியம்

- தொழிலாளர்கள் வெளியே செல்லாமல் தக்க வைக்க
- தந்திர மேலாண்மையின் படி முடிவு எடுக்க
- வாடிக்கையாளரின் நன்மதிப்பை அதிகரிக்க
- தொழிலாளர்களிடையே கூட்டு பணியை ஊக்குவிக்க
- தொழில் தடைகளை குறைக்க

- இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்
- பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு
- கடனாளிகளிடம் இருந்து பெறவேண்டிய தொகை
- பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகை

5 தொழில் நிதிமூலங்களை தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகளில் எதேனும் இரண்டை குறிப்பிடுக

- **நிறுவனத்தின் நிதி திறன்**
- **நிறுவனத்தின் கடன் தர மதிப்பீடு**

3 Marks

1 தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.

- தொழில் நிதியியல் என்பது முதலீட்டுக்கான நிதியை பெறுவதும், அதனை முறையாக பயன்படுத்தல் மூலம் தொழில் நிறுவனங்களின் ஒட்டு மொத்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வணிக செயல்பாடு ஆகும் - **வீலர்**

2 அடகு கடன் என்றால் என்ன?

- கடன் பெறுநர் அவசர நிதித் தேவையை பூர்த்தி செய்து கொள்ள தனக்கு சொந்தமான பொருளை கடன் வழங்குநரிடம் அடகு வைத்து பெறும் கடன் அடகு கடன் ஆகும்

3 நீண்ட கால மற்றும் குறுகிய கால நிதிகளுக்கான மூலங்களை பட்டியலிடுக.

1) நீண்ட கால நிதிகளுக்கான மூலங்கள்

- பங்குகள் வெளியீடு
- கடன் பத்திரங்கள்
- இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்
- பொது வைப்பு
- வணிக வங்கிகளிடமிருந்து பெறும் நீண்ட கால கடன்
- நிதி நிறுவன கடன்

2) குறுகிய கால நிதிகளுக்கான மூலங்கள்

  - கடன்கள் மற்றும் முன்பணம்
  - வங்கி மேல்வரைப்பற்று
  - மாற்றுச் சீட்டை தள்ளுபடி செய்தல்
  - வியாபார கடன்
  - அடகு கடன்
  - பந்தக கடன்

- வைப்பு இரசீது என்பது வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மை பங்குகள் வாங்கியதற்கு சான்றாக வங்கியால் வழங்கப்படும் மாற்றுமுறை ஆவணம் ஆகும்

3 உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?

- அந்நிய செலாவணியில் வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணம் உலகளாவிய வைப்பு இரசீது ஆகும்
- இது அமெரிக்காவை தவிர்த்து பிற நாட்டு பங்கு சந்தையில் வெளியிடப்படும்

4 அமெரிக்க வைப்பு இரசீதுஎன்றால் என்ன?

- அமெரிக்க வைப்பு இரசீது என்பது அமெரிக்காவை சாராத ஒரு நிறுமம் அமெரிக்க நிதி சந்தையில் கலந்து கொள்ளும் பொருட்டும், அமெரிக்க குடிமகன்கள் அந்நிய பிணையங்களில் முதலீடு செய்யும் வகையிலும் டாலரில் மதிப்பிடப்பட்டிருக்கும் மாற்றத்தக்க பிணையமாகும்.

5 அந்நிய செலாவணி மாற்று பத்திரம் என்றால் என்ன?

- அந்நிய செலாவணி மாற்று பத்திரம் என்பது உள்நாட்டு பணத்தை தவிர பிற நாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகைப்பத்திரம் ஆகும்

4 Marks

1 பன்னாட்டு நிதியின் முக்கியத்துவம் யாது?

- மாற்று விகிதங்களை நிர்ணயிக்க
- பண விக்க விகிதங்களை ஒப்பீடு செய்ய
- வெளிநாட்டு கடன் பத்திரங்களில் முதலீடு செய்ய
- பல்வேறு நாடுகளின் பொருளாதார சூழ்நிலைகளை கணக்கிட்டு வெளிநாட்டு சந்தையில் முதலீடு செய்ய

2 அந்நிய செலாவணி மாற்று பத்திரம் என்றால் என்ன?

- அந்நிய செலாவணி மாற்று பத்திரம் என்பது உள்நாட்டு பணத்தை தவிர பிற நாட்டு நாணய மதிப்பில் வெளியிடப்படும் சிறப்புமிக்க ஒரு வகைப்பத்திரம் ஆகும்

**3 அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று நன்மைகளை விளக்குக.**

1. பாதகமான செலுத்து நிலையை தீர்த்தல்
   - அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு அயல்நாட்டு செலாவணியை பெற்றுதருகிறது
   - இதனால் அந்நாட்டின் பாதகமான செலுத்துநிலையை தீர்க்க உதவுகிறது
2. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

- மறு ஏற்றுமதி

2 மறு ஏற்றுமதி வியாபாரத்தில் உதாரணங்கள் இரண்டினைத் தருக

- இந்திய நிறுமம் தாய்லாந்திலிருந்து ரப்பரை இறக்குமதி செய்து அவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வது
- இந்திய நிறுமம் தெற்கு ஆப்பிரிக்கவிலிருந்து வைரத்தை இறக்குமதி செய்து பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக ஆம்ஸ்டர்டம் நகருக்கு ஏற்றுமதி செய்வது

3 ஏற்றுமதி என்றால் என்ன

- உள்நாட்டு உற்பத்தி பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது எற்றுமதி ஆகும்

4 மொத்த வியாபாரம் என்றால் என்ன

- மொத்த வியாபாரம் என்பது பொருட்களை உற்பத்தி செய்பவரிடம் மொத்தமாக வாங்கி சில்லறை வியாபாரிகளுக்கு குறைந்த அளவில் விற்பனை செய்யும் நடைமுறை வணிக செயலாகும்

5 சில்லறை வியாபாரத்தின் பொருள் என்ன?

- சில்லறை வியாபாரம் என்பது மொத்த வியாபாரியிடம் பொருட்களை வாங்கி நுகர்வோருக்கு விற்பனை செய்வது ஆகும்

6 உனது ஊரில் உள்ள சில்லறை விற்பனை நிலையங்களின் பெயர் தருக.

- ரவி மளிகை, ஆத்தூர்
- கல்யாணி கவரிங், சேலம்
- பொன்னி கூட்டுறவு அங்காடி, சேலம்

7 வியாபாரத்தின் முக்கியக் குறிக்கோள் யாது?

- இலாபம் ஈட்டும் நோக்கில் பண்டங்களையும் பணிகளையும் வழங்குவது
- பண்டங்களையும் பணிகளையும் சரியான நேரத்தில் வழங்குவது
- உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையீட்டாளராக செயல்படுவது

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

8 உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும்
2. உள்நாட்டு நாணயத்தில் பொருட்கள் பரிமாற்றம்
3. போக்குவரத்து இடர்பாடு பன்னாட்டு வியாபாரத்தை விட குறைவு
4. உள்நாட்டு வியாபார நடைமுறை விதிகள் மற்றும் சட்டங்கள்

- ✓ நிதி வசதி குறைவாக உள்ள உற்பத்தியாளர் இடைநிலையரை சார்ந்து இருப்பார்

## அத்தியாயம் 24 சில்லறை வியாபாரம் செய்தல்

2 மதிப்பெண்

1 சில்லறை வியாபாரம் செய்தல் என்றால் என்ன?

- ➢ நுகர்வோருக்கு நேரடியாக பொருள்களையும் சேவைகளையும் சிறிய அளவில் விற்பனை செய்யும் நடைமுறை சில்லறை வியாபாரம் செய்தல் ஆகும்

2 மடங்குக் கடையின் பொருள் யாது?

- ➢ ஒரே வகை கடைககளின் சங்கிலி வரிசையே இது. இவை அனைத்தின் உரிமெயும் தொழில் நிறுவனத்திடம் உள்ளது. அனைத்தைய்ம் இதுவே கட்டுப்படுத்துகிறது - **எல்வின் தாமஸ்**

3 விற்பனை எந்திரத்தின் இரண்டு நன்மைகளை கூறுக

- ➢ 24 மணி நேரமும் செயல்படும்
- ➢ பணியாளர்களின் செலவை குறைக்கிறது

4 சில்லறை வியாபார அமைப்புகளின் வகைகள் யாவை?

அ, சுற்றாடும் அல்லது நகரும் வியாபாரிகள்

ஆ நிலையிடை சிற்றளவு சில்லறை வியாபாரிகள்

இ. நிலையிடை பேரளவு சில்லறை வியாபாரிகள்

5 சுற்றாடும் வியாபாரிகள் என்பவர் யார்?
வியாபாரம் செய்வதற்கென்று நிலையான இடம் இல்லாமல் வாடிக்கையாளர் இருக்குமிடங்களுக்கே சென்று விற்பனை செய்பவர்கள் சுற்றாடும் அல்லது நகரும் வியாபாரிகள் ஆவார்

6 சுற்றாடும் அல்லது நகரும் வியாபாரிகளின் வகைகள் யாவை?
- சுமைதூக்கி மற்றும் வாகனத்தில் விற்கும் வியாபாரிகள்
- சாலையோர வியாபாரிகள்
- சந்தை வியாபாரிகள்
- இடம் பெயர் வியாபாரிகள்

7 பொது பண்டக சாலை என்றால் என்ன?
நுகர்வோர் தங்கள் வீட்டின் அருகிலேயே தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஏற்றவாறு அனைத்து வகைப்பொருட்களையும் குறைந்த விலையில் வாங்கி வைத்து வியாபாரம் செய்யும் இடம் பொது பண்டக சாலை எனப்படும்

8 ஒரே வகை பண்டக சாலை என்றால் என்ன?
ஒரு குறிப்பிட்ட வகை பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரே வகை பண்டக சாலை ஆகும்

9 நிலையிடை பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள் என்றால் என்ன?
அதிக மூலதனத்துடன் பேரளவு பொருட்களை இருப்பாக கொண்டு குறிப்பிட்ட இடத்தில் பேரளவில் சில்லறை வியாபாரம் செய்யும் நிறுவனங்கள் நிலையிடை பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள் எனப்படும்

10 தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?
- தானியங்கி விற்பனை எந்திரம் என்பது எந்திரம் வழியாக பொருட்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு பொருட்கள் விற்கும் எந்திரம் ஆகும்.
- இது நாணயங்கள், அட்டைகள் அல்லது வில்லைகள் கொண்டு இயங்க கூடியது ஆகும்

11 சிறப்பங்காடிகள் என்றால் என்ன?
தேவையான பொருள்கள் அனைத்தும் பல்வேறு தரம், வகை, விலை வாரியாக பிரித்து வைத்து நுகர்வோர்கள் தானே எடுக்கும் வகையில் அடுக்கி வைத்து விற்பனை செய்யும் ஒரு பேரளவு சில்லறை பண்டகச்சாலை சிறப்பங்காடி எனப்படும்

12 சிறப்புப் பண்டக சாலைகள் என்றால் என்ன ?

- ஒரு வகைப்பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருட்கள் மட்டும் விற்பனை செய்யும் சில்லறை விற்பனை கடைகள் சிறப்புப் பண்டக சாலைகள் ஆகும்

3 மதிப்பெண்

1 பொது பண்டகசாலைகளின் இயல்புகளை கூறுக

- நுகர்வோர்களுக்கு வசதியாக பெரும்பாலன நேரங்களில் கடை திறந்திருக்கும்
- தெரிந்த வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதி உண்டு
- பல சரக்கு மளிகை, தின்பண்டங்கள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன

2 வாடகை கொள்முதல் முறைக்கும் தவணை விற்பனை முறைக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.

| | வாடகை கொள்முதல் முறை | தவணை கொள்முதல் முறை |
|---|---|---|
| 1 | இது விற்பனை ஒப்பந்தம் அல்ல | இது விற்பனை ஒப்பந்தம் |
| 2 | பொருளை வாங்கியவருக்கு பொருளின் மீது உரிமை ஏதும் இல்லை | பொருளை வாங்கியவருக்கு பொருளின் மீது முழு உரிமை உண்டு |
| 3 | தவணை தொகையை வாங்கியவர் செலுத்த தவறும் பொழுது விற்பணையாளருக்கு திரும்ப எடுத்துகொள்ளும் உரிமை உண்டு | தவணை தொகையை வாங்கியவர் செலுத்த தவறும் பொழுது விற்பணையாளருக்கு திரும்ப எடுத்துகொள்ளும் உரிமை ஏதும் இல்லை |
| 4 | வாராக்கடன் மிக குறைவு | வாராக்கடன் மிக அதிகம் |

3 சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக

- நகரின் மையப்பகுதியில் அமைவிடம்
- ரொக்க விற்பனை மட்டும் உண்டு
- கடன் விற்பனை கிடையாது
- இதை அமைக்க அதிக முதலீடு தேவை
- சுய சேவையின் அடிப்படையில் விற்பனை

4 அஞ்சல் வழி வியாபாரத்தை பற்றி விளக்குக

5 காட் (GATT) என்றால் என்ன?

- முதல் உலாகளவிய பன்முனை வர்த்தக ஒப்பந்தம் ஆகும்
- ஜூன் 30,1948 அன்று முதல் ஜனவரி 1, 1995 வரை அமலில் இருந்தது

3 மதிப்பெண்

1 உலகவர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டதின் முதன்மை நோக்கம் யாது?

- உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை மேபடுத்துதல்
- உறுப்பு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு உலகின் பல்வேறு வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்
- பன்னாட்டு வணிகத்தில் ஒரு ஒருங்கிணைந்த மேலும் நிறைவேற்றத்தக்க மற்றும் நீடித்த வர்த்தக முறையை ஊக்குவிக்க
- பன்னாட்டு அளவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய
- சுற்றுச்சூழலை பாதுகாக்க

2 உலக ~~வர்த்தக அமைப்பின்~~ வங்கியின் கூட்டமைப்புகளை வரிசைப்படுத்துக

Name the affiliate of World Bank

- பன்னாட்டு வளர்ச்சி சங்கம் - 1960
- சர்வதேச நிதி நிறுவனம் - 1956
- பன்னாட்டு முதலீட்டு உத்திரவாத நிறுவனம்-1988
- தகராறு தீர்வுக்கான பன்னாட்டு நிதியம் - 1966

3 உலக வங்கி மீதான விமர்சனங்கள் யாவை?

- தடையற்ற வர்த்தகம் வளரும் நாடுகளை விட வளர்ந்த நாடுகளுக்கு சாதகமாக உள்ளது
- சுற்றுச்சூழல் பாதுகாப்பை புறக்கணிக்கிறது
- சமூக பண்பாட்டு காரணிகளை புறக்கணிக்கிறது
- வேளான்மை மீதான கட்டணத்தை குறைப்பதில் தோல்வி அடைந்துள்ளது

4 சிறப்பு எடுப்பு உரிமை எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

- சிறப்பு எடுப்பு நாணய மதிப்பு முக்கிய 5 நாணயங்களின் கூடையின சந்தை மதிப்பீட்டு விகிதங்களை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்க டாலர்களில் மதிப்பைக் குறிக்கிறது.
- SDR நாணய மதிப்பு தினசரி கணக்கிடப்படுகிறது (சர்வதேச நாணய நிதியம் விடுமுறை நாட்கள் அல்லது சர்வதேச நாணய நிதியம் வணிகத்திற்கு மூடப்பட்ட நாட்களை தவிர)
- மதிப்பீட்டு கூடை மதிப்பாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு சரிசெய்யப்படும்.
- ஐந்து முக்கிய நாணயம் மற்றும் நாடுகள்

- வாணிப சமநிலை என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவினை குறிக்கிறது

4 தனியார் மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?

- அயல்நாட்டு முதலீடுகள்
- நீண்ட கால கடன்கள்
- அயல்நாட்டு நாணய வைப்பு

5 வங்கி மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?

- அந்நிய செலாவணியை கையாள அதிகாரம் கொண்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது

6 அலுவல் சார்ந்த மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?

- அயல்நாட்டு நாணயம்
- அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள்

3 மதிப்பெண்

1 செலுத்தல் சம நிலை அறிக்கை ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?

**பின்வரும் காரணங்களுக்காக செலுத்தல் சம நிலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்**

- ஒரு நாட்டு அரசின் பணம் சார்ந்த, பொது நிதி சம்பந்தமான மற்றும் வாணிப கொள்கைகளை வடிவமைக்க
- அரசின் கொள்கை முடிவுகளை எடுக்க
- பொருளாதார விளைவுகளை கணக்கிட

2 செலுத்தல் சம நிலை அறிக்கை எதை வெளிக்காட்டுகிறது

- அரசாங்கம் குடியிருப்போர்கள் பாதுகாப்பாக இருப்பதை குறிக்கிறது
- உள்நாட்டு உற்பத்திக்கு தேவையான மூலதனத்தை வழங்கும் நிலையில் இருக்கும்
- மற்ற நாடுகளுக்கு கடன் வழங்க முடியும்
- பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்

3 நடப்புக் கணக்கின் வரவுப் பக்கத்தில் தோறும் இனங்கள் யாவை?

- கண்ணுக்கு புலனாகும் பொருட்களின் ஏற்றுமதி
- கண்ணுக்கு புலனாகாத ஏற்றுமதிகள்
- அயல்நாட்டில் செய்யப்பட்ட போக்குவரத்து சேவைகள்
- அயல்நாட்டில் செய்யப்பட்ட வங்கி சேவைகள்

- ❖ வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள்
- ❖ அயல்நாட்டு சுற்றுலா பயணிகளால் உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள்

4 மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?

1. தனியார் மூலதனம்
2. வங்கி மூலதனம்
3. அலுவல் சார்ந்த மூலதனம்

5 மதிப்பெண்

1 மூலதன கணக்கின் கட்டமைப்பை விளக்குக

- ➢ தனியார் மூலதனம்
- ❖ அயல்நாட்டு முதலீடுகள்
- ❖ நீண்ட கால கடன்கள்
- ❖ அயல்நாட்டு நாணய வைப்பு

- ➢ வங்கி மூலதனம்
- ❖ அந்நிய செலாவணியை கையாள அதிகாரம் கொண்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது
- ➢ அலுவல் சார்ந்த மூலதனம்
- ❖ அயல்நாட்டு நாணயம்
- ❖ அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள்

2 செலுத்தல் சம நிலைக்கும் வாணிபச் சம நிலைக்கு உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ.எண் | அடிப்படை | செலுத்துதல் சம நிலை | வாணிப சமநிலை |
|---|---|---|---|
| 1 | பொருள் | ”அறிக்கையளிக்கும் நாடுகளின் குடியிருபோர்களுக்கு இடையிலான | வாணிப சமநிலை என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி |

1 வருமான வரி என்றால் என்ன?

- ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமான வரி ஆகும்

2 முந்தைய ஆண்டு என்றால் என்ன?

- ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானத்தின் ஆண்டு முந்தைய ஆண்டு அல்லது நிதி ஆண்டு ஆகும்

3 ~~தனி~~ நபர் வரையறு? Define the term person?

பிரிவு 2(3) வருமான வரிச்சட்டம் 1961 இன் படி நபர் என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர்

1. தனி நபர்
2. இந்து கூட்டு குடும்பம்
3. கூட்டாண்மை
4. கூட்டுபங்கு நிறுமம்
5. கூட்டுறு
6. உள்ளாட்சி நிர்வாகம்
7. சட்ட ரீதியான செயற்கை நபர்கள்

**4 மதிப்பீடு செய்யப்படும் நபர் என்பவர் யார்?**

- பிரிவு 2(7) வருமான வரிச்சட்டம் 1961 இன் படி ”சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்பட்டதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீடு செய்யப்படும் நபர் ஆவார்

5 கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?

- பிரிவு 2(9) வருமான வரிச்சட்டம் 1961 இன் படி எந்த ஆண்டில் வரி செலுத்தப்படுகிறதோ அந்த ஆண்டு மதிப்பீடு ஆண்டு அல்லது கணக்கீடு ஆண்டு ஆகும்
- இது பொதுவாக ஏப்ரல் 1 முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31 வரை இருக்கும்

## மூன்று மதிப்பெண்

1 முழு மொத்த வருமானம் என்றால் என்ன?

| வ.எண் | தலைப்பு | தொகை |
|---|---|---|
| 1 | சம்பள வருமானம் | XXXX |

| | | |
|---|---|---|
| 2 | வீட்டுச்சொத்தின் மீதான வருமானம் | XXXX |
| 3 | வணிகம் மற்றும் தொழில் வருமானம் | XXXX |
| 4 | மூலதன் ஆதாயம் | XXXX |
| 5 | பிற வழிகளில் பெறப்பட்ட வருமானம் | XXXX |
| | மொத்தம் | XXXX |
| கூட்டுக | இணைக்கப்பட்ட வருமானம் | XXXX |
| | | XXXX |
| நீக்குக | கடந்த ஆண்டில் ஈடுசெய்யப்படாத நட்டம் | XXXX |
| | முழு மொத்த வருமானம் | XXXX |

2 ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக

ஐவகை வருமான தலைப்புகள்

- சம்பள வருமானம்
- வீட்டுச்சொத்தின் மீதான வருமானம்
- வணிகம் மற்றும் தொழில் வருமானம்
- மூலதன் ஆதாயம்
- பிற வழிகளில் பெறப்பட்ட வருமானம்

3 வேளாண்மை வருமானம் குறிப்பு வரைக.

பிரிவு 2(1A) வருமான வரிச்சட்டம் 1961 இன் படி

வேளான்மை வருமானம் என்பது

- இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்
- விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் விவசாய நிலத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்
- குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரு பண்ணை கட்டிடத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்
- நாற்றுப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்று அல்லது இளஞ்செடி மூலம் பெறப்பட்ட வருமானம்

4 மொத்த வருமானம் என்பது குறித்து நீவீர் அறிவது யாது?

2 மதிப்பெண்

1 மறைமுக வரியின் வரைவிலக்கணம் தருக

❖ வரிக்குரியவர் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்றமுடியும் எனில் அது மறைமுக வரி

2 **இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரியின் நான்கு வகைகளை வரிசைப்படுத்துக**.

1. மத்திய சரக்கு மற்றும் விற்பனை வரி
2. மாநில சரக்கு மற்றும் விற்பனை வரி
3. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் விற்பனை வரி
4. யூனியன் பிரதேச சரக்கு மற்றும் விற்பனை வரி

3 சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?

❖ சரக்கு மற்றும் சேவை வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரியாகும்

4 மாநில சரக்கு மற்றும் சேவை வரி பற்றிக் குறிப்பு வரைக.

❖ மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மாநில அரசால் விதிக்கப்படும் வரியாகும்

5 மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?

❖ மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும்

3 மதிப்பெண்

1 நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் உள்ள இரண்டு வேறுபாடுகள் எழுதுக.

| வ.எண் | அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|---|
| 1 | இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| 2 | வரித்தாக்கம் | ஒரு நபரை சென்றடைகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றது |

2 சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை?

- ➢ இந்தியாவில் மாநிலங்களுக்கிடையேயன வரி விகிதத்தில் சமநிலை ஏற்பத்துதல்
- ➢ வரிக்கு வரி என்ற முறையை நீக்குதல்(உள்ளீட்டு வரியின் மூலம்)
- ➢ உற்பத்திக்கு பதிலாக நுகர்வு அடிப்படையிலான வரி

- வரி ஏய்ப்பு மற்றும் ஊழலைக் குறைத்தல்
- பொருளாதார சிதைவுகளை குறைத்தல்
- மத்திய மற்றும் மாநில அளவிலான அனைத்து மறைமுக வரிகளையும் ஒருங்கிணைத்தல்

3 சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் பணிகளை விளக்குக

279A (4) ன் படி, கவுன்சில், ஜி.எஸ்.டி. தொடர்பான முக்கிய விடயங்களில் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பரிந்துரைகளை வழங்கும்.. அதாவது

- வரிகள், தீர்வைகள் மற்றும் கூடுதல் வரி போன்றவற்றை ஒருங்கிணைப்பதற்கு தேவையாண ஆலோசனை வழங்குதல்
- GST யில் இருந்து விலக்களிக்கப்படும் பொருட்கள் மற்றும் பொருட்கள் மீதான GST விகிதத்தை குறைக்க
- பொருட்கள் மீதான GST விகிதம் தொடர்பானவை

4 ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியை உதாரணத்துடன் விளக்குக.

- மாநிலத்திற்கு இடையே நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும்
- உதாரணம் தமிழகத்தில் உள்ள விற்பனையாளர் கர்நாடகாவில் உள்ள நுகர்வோருக்கு / விற்பனையாளருக்கு விற்பனை செய்வது

5 சரக்கு மற்றும் சேவை வரியின் குறைபாடுகள் மூன்றினை எழுதுக.

1. மென்பொருள்கள் வாங்குவதால் அடக்க விலை அதிகரிக்கிறது
2. GST நிலைச்சொத்து சந்தையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது
3. சிறு மற்றும் குறுந்தொழில்கள் GST ஆல் பாதிக்கப்பட்டுள்ளது

